

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, கழக சட்டத்துறை இணைச் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினருமான கோவை கே.எம்.தண்டபாணி, அவரது பிறந்தநாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது மகன் முன்னாள் கூடுதல் குற்றவியல் அரசு வழக்கறிஞர் கே.எம்.டி. முகிலன் (சென்னை உயர் நீதிமன்றம்) உள்ளார்.

### திண்டிவனம் நகரம் - 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர்

# கே.இராசேந்திரன் இல்லத் திருமண வரவேற்பு: முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் வாழ்த்தினார்!

## டாக்டர் இரா.மாசிலாமணி - வழக்கறிஞர் ஆர்.சேதுநாதன் - சீதாபதி சொக்கலிங்கம் பங்கேற்பு!

திண்டிவனம், செப். 1 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனம் நகரம், 14 வது வார்டு கிளைக் கழகச் செயலாளர் கே.இராசேந்திரன் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இவ்விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.மாசிலாமணி, வழக்கறிஞர் ஆர். சேதுநாதன், சீதாபதி சொக்கலிங்கம், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் பா.சேகர்,

தலைமையின் செயற்குழு உறுப்பினர் சீனிராஜ், ந.கபிலன், வழக்கறிஞர் கே.அசோகன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ர.கே.பி.ரமேஷ், எம்.டி.பாபு, நகர கழகச் செயலாளர் எம்.கண்ணன், நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகர கழக அவைத் தலைவர் ஆர்.ரவிச்சந்திரன், மாவட்டப் பிரதிநிதி வி.எஸ்.முருகன்,

நகரப் பொருளாளர் சின்னா கே.ராஜேந்திரன், நகர மன்ற உறுப்பினர்கள் லதா சாரங்கபாணி, அரும்பு குணசேகரன், கே.சரவணன், பரணிதரன், விஜயராகவன், வி.சுந்தரமூர்த்தி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எம்.எல்.பி.கோபிநாத், மாவட்டத் தொண்டர் அணி தலைவர் பிர்கா எஸ்.செல்வம், எல்.ஐ.சி.ரஜேஷ், டி.ஏகாம்பரம், அன்னை எஸ்.சந்தானம், எஸ்.எம்.எஸ்.முரளிதர், சுகுமார், ஒலக்கூர் ஒன்றிய கழகச் செயலாளர் ஏ.ராஜாராம், மரக்காணம் ஒன்றியக் கழகச் செயலாளர் ஆ.பழனி, மையம் ஒன்றிய செயலாளர் மணிமாறன், ஒன்றிய கவுன்சிலர் அண்ணாதுரை, மாவட்ட இலக்கிய பகுத்தறிவுப் பேரவை அணி துணை அமைப்பாளர் ஆசிரியர் எம்.குப்புசாமி, கோவிந்தாபுரம் சீத்தாராமன், ஒன்றிய மாவட்டப் பிரதிநிதி காளி,

வழக்கறிஞர் செந்தில் குமார், இலியாஸ், மேஸ்திரி என்.ராஜேந்திரன், எம்.தஸ்தகீர் மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நண்பர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

14 வது வார்டு கிளைக் கழக செயலாளர் கே.இராசேந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

### ‘ஜல்லிக்கட்டு’ பற்றி அவதூறாகப் பேசிய

# த.வெ.க. எம்.எல்.ஏ. கருப்பையாவுக்கு மாடுபிடி வீரர்கள் - மாடு வளர்ப்போர் கண்டனம்!

மதுரை, செப். 1 -

உலகப் புகழ்பெற்ற அலங்கநல்லூர் ஜல்லிக்கட்டு சட்டப் போராட்டம் கண்டு மீட்டெடுத்து கொடுத்தவர் தலைவர் கலைஞர் த.வெ.க. சோழவந்தான் தொகுதி எம்எல்ஏ எம்.வி. கருப்பையாவின் சட்டமன்ற பேச்சுக்கு மதுரை மாவட்ட மாடுபிடி வீரர்கள் மாடுகள் வளர்ப்போர் என பலரும் கடும் எதிர்ப்பு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு போன்ற ஊர்களில் வருடந்தோறும் உலகப்புகழ் பெற்ற தமிழர்களின் பாரம்பரிய வீரத்தை எடுத்துரைக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் வெகு சிறப்பாக நடைபெறும்.

அதனை பல்லாயிரம் பேர் ஆர்வத்துடன் எதிர்பார்த்து தமிழ்நாடு மற்றும் பல மாநிலங்கள், பல வெளிநாடுகளில் இருந்து ஆவலுடன் கண்டுகளித்து மகிழ்வதும், மாடுபிடி வீரர்களும் மாடு வளர்ப்போரும் பெருமையுடன் பங்கேற்பதும் வழக்கம் திருவிழா கோலம் காணும் இந்த உலகப்புகழ்பெற்ற பெற்ற தமிழர்களின் வீர விளையாட்டை கொச்சைப்படுத்தும் வகையிலும் இளைஞர்களின் வீரச்செயலை அவமானப்படுத்தும் வகையிலும் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.கருப்பையா சட்டசபையில் கூறியிருப்பது மதுரை மாவட்ட மக்களை கோபப்படுத்தி உள்ளது, இந்த பேச்சுக்கு தவெக முதல்வர் கண்டனம் தெரிவிக்காத நிலையில் மாவட்ட மக்களை மேலும் கோபத்தின் உச்சத்திற்கு கொண்டு சென்றுள்ளது.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்ற கூட்டத்தொடரில் பேசிய சோழவந்தான் தொகுதி த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.கருப்பையா தமிழர்களின் பாரம்பரிய மிக்க வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டியால் இளைஞர் சமுதாயம் சீரழிகிறது என்று கூறினார்

இதை அவை குறிப்பிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்து அமர்ந்திருந்த த.வெ.க.வினரும், முதல்வரும் எதுவும் சொல்லவில்லை.

ஜல்லிக்கட்டு போட்டி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களின் வீரத்தையும் கலாச்சாரத்தையும் உலகிற்கு எடுத்துக்காட்டும் அற்புதமான விளையாடாக திகழ்ந்து வந்துள்ளது.

ஜல்லிக்கட்டு விளையாட்டு போட்டிக்கு சோதனை வந்த காலத்தில் முதல் குரல் கொடுத்தவர் அன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், மாபெரும் சட்ட போராட்டம் காண மாவட்ட செயலாளர் பி.மூர்த்தியை அழைத்து அவருடன் சட்ட நிபுணர்களை டெல்லிக்கு அனுப்பி சட்டப் போராட்டம் காண செய்து வெற்றியும் கண்டவர் தலைவர் கலைஞர் அவர்கள், அதைத் தொடர்ந்து அதிமுக ஆட்சியில் மீண்டும் ஜல்லிக்கட்டுக்கு தடை விதிக்கப்பட்டு சோதனை வந்தபோது தமிழ்நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் வெடித்தது, அப்போது அலங்காநல்லூரில் போராட்டக் களத்தில் இறங்கியவர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டத்தில் முதலில் துவங்கிய ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான போராட்டம் தமிழ்நாடு முழுவதும் கடல் தாண்டி உலகம் முழுவதும் நடக்க தொடங்கியது.

குறிப்பாக வரலாற்றில் முத்திரை பதிக்கக்கூடிய வகையில் நடந்த மெரினா போராட்டம் எல்லோரது கவனத்தையும் ஈர்த்தது. இந்த போராட்டத்தின் வாயிலாக மீண்டும் தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு போட்டி அலங்காநல்லூர், அவனியாபுரம், பாலமேடு உள்ளிட்ட தமிழ்நாடு முழுவதும் துவக்கப்பட்டு எல்லோரும் மகிழ்ச்சி கொண்டார்கள்.

கலைஞர் அவர்கள் தமிழர்கள் வீர விளையாட்டு என ஜல்லிக்கட்டு போட்டியில் மிக்க ஆர்வம் கொண்டதை போல் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் ஆர்வம் கொண்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் தமிழ்நாட்டில் முதல்முறையாக அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் சுமார் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன் சர்வதேச தரத்தில் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தை அமைத்து அங்கு ஜல்லிக்கட்டு போட்டிகளை துவக்கி வைத்து மகிழ்ச்சி கொண்டார்

அதேபோல் கழக இளைஞரணி செயலாளர், எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாக்களில் பங்கேற்று பல லட்சங்கள் மதிப்படையை பரிசுகளை வழங்கி மாடுபிடி வீரர்களையும், மாடு வளர்ப்பவர்களையும் கவுரவித்தார்

அதை தொடர்ந்து மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தொடர்ச்சியாக ஜல்லிக்கட்டு போட்டிகளை நடத்தி காளைகளுக்கும், காளையர்களுக்கும் பல பரிசுகளை வழங்கினார். மேலும் பல்வேறு அமைப்பினரும் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் பிரத்யோக ஜல்லிக்கட்டு போட்டிகளை பாதுகாப்புடன் நடத்தினர்.

இதனை பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்புடன் அமர்ந்து பார்த்து மகிழ்ந்தார்கள்.

பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் மாடுபிடி வீரர்கள் காளைகள் பங்கேற்றன, பல மாவட்டங்களில் இருந்து உற்சாகத்துடன் இளைஞர்களும் பொதுமக்களும்,

கலைஞரின் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாக்களை பார்த்து மகிழ்ந்தார்கள்.

மதுரை உள்ளிட்ட தென் மாவட்டத்தில் ஜல்லிக்கட்டு போட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் அதிக அளவில் பெண்களும் ஜல்லிக்கட்டு காளைகளை வளர்த்து அவர்களே ஜல்லிக்கட்டு கலத்திற்கு கொண்டு வந்து போட்டியில் பங்கேற்று பரிசுகளை பரிசு பெற்ற வீர மங்கைகளும் உண்டு .

இப்படி ஜல்லிக்கட்டை போற்றி புகழ்ந்து உயிரிலும் மேலாக வளர்த்து ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்கும் இளைஞர்களை இழிவுபடுத்தும் வகையில் சட்டசபையில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா பேசியதற்கு அவரது போக்கிக்கு கண்டனம் தெரிவிக்காமல் முதல்வர் மற்றும் அமைச்சர்கள் கைகட்டி வாய் பொத்தி இருந்ததற்கு மதுரை மாவட்ட மக்கள் மட்டும் இன்றி தென் மாவட்ட மக்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

இதே போல் மாடுபிடி வீரர்கள், மாடு வளர்ப்போர், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் குறிப்பாக இளைஞர்கள் பெண்கள் பல்வேறு கட்சியினர் கழகத்தினர் என பெரும்பாலானோர் தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

**இரா.மனோகரன்**
**செய்தியாளர்,**
**மதுரை மாவட்ட முரசொலி.**

### குற்றச் செயல்களில் ஈடுபடும் த.வெ.க.வினர்!

# ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்களை முடக்கும் த.வெ.க. அரசுக்கு கண்டனம்!

## கரூர் மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

கரூர், செப். 1 -

கழக நிர்வாக சீரமைப்புக்கு வரவேற்பு, ‘திராவிட மாடல்’ ஆட்சி திட்டங்கள் முடக்கும் த.வெ.க. அரசுக்கு எதிர்ப்பு, விலைவாசி உயர்வுக்கு கண்டனம் தெரிவித்து கரூர் மாவட்ட செயற்குழுவில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக, மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

கரூர் மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (30.08.2026 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம், (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கத்தில் கரூர் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினார்.

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.விஜயக்குமார்,

அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் சூரியனூர் அ.சந்திரன், கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர், கரூர் மேற்கு பகுதிச் செயலாளர் தாரணி பி.சரவணன்,

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவை ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணி, மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சு.ப.ராஜகோபால், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே.சுப்பிரமணி, க.சிவகாமசுந்தரி, கழக பொதுக்குழு உறுப்பினர்கள் என்.எஸ். ஆறுமுகம், கே.வேலுச்சாமி, வி.கே.டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாம சுந்தரி, கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார்,

கரூர் மாநகரக் கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.எஸ். ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் ஆர். ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், கரூர் வடக்கு பகுதி கழக பொறுப்பாளர் எம்.பாண்டியன், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.எஸ். மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் என்.மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றியக் கழக செயலாளர் சி.வளர்மதி, கரூர் வடக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் வி.கே.வேலுச்சாமி, கரூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் ப.முத்துக்குமார், தாந்தோணி கிழக்கு ஒன்றியக் கழக செயலாளர் எம்.ரகுநாதன், தாந்தோணி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பாஸ்கரன், கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.ரவிராஜா, கடவூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எம்.ராமலிங்கம், கடவூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் கே.வீராசாமி (எ) சுதாகர், கடவூர் மேற்கு ஒன்றியக் கழக பொறுப்பாளர் என்.செல்வராஜ், கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் சி. கதிரவன், கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் எல். கரிகாலன், குளித்தலை மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ப.தியாகராஜன், தோகைமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் இ.ராமர், தோகைமலை கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.அண்ணாதுரை, குளித்தலை நகரக் கழக செயலாளர் இரா.மாணிக்கம், பள்ளப்பட்டி நகர கழக பொறுப்பாளர் அ.வாசிம் ராஜா, புகழூர் நகர கழக செயலாளர் ஏ.குணசேகரன், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர்க் கழகச் செயலாளர் க.முரளி ராஜா, புலியூர் பேரூர் கழகச் செயலாளர் கா.அம்மையப்பன், உப்பிடமங்கலம் பேரூர் கழக செயலாளர் சி.தங்கராஜ், கிருஷ்ணராயபுரம் பேரூர்க் கழக செயலாளர் எம்.சசிக்குமார், பழைய ஜெயங்கொண்டம் பேரூர்க் கழக செயலாளர் ஆர்.மோகன்ராஜ், மருதூர் பேரூர்க் கழகச் செயலாளர் இ.ரவீந்திரன், நங்கவரம் பேரூர்க் கழக செயலாளர் எம்.முத்து (எ) சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை வழங்கி வி. செந்தில் பாலாஜி கூறியதாவது: -

கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் 22.8.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களை முழுமையாக பின்பற்றி, கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி, கரூர் மேற்கு மாவட்டக் கழகம், கரூர் கிழக்கு மாவட்டக் கழகம் என பிரிக்கப்பட்டதற்கு இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவர் தளபதி அவர்களின் அறிவிப்பின்படியும், தலைமை செயற்க்குழு கூட்டத்தில் கழக நிர்வாக சீரமைப்பு தீர்மானத்தின்படியும் பகுதி, நகர, ஒன்றிய, பேரூர்க் கழகம் மறுசீரமைப்பு செய்வதெனவும்,

மேலும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் வயது வரம்பின் அடிப்படையில் மறுசீரமைப்பு செய்திடவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கொண்டு வந்த மக்கள் நல திட்டங்களை முடக்கி தமிழ்நாட்டின் வளர்ச்சியையும், தமிழ் மக்களின் முன்னேற்றத்தையும் தடுத்திடும் வகையில் செயல்படும் த.வெ.க. அரசை வன்மையாக இக்கூட்டம் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அரிசி, பருப்பு, சர்க்கரை, காய்கறிகள் உள்பட அத்தியாவசிய உணவு பொருட்களின் விலைவாசியை கட்டுப்படுத்த தவறிய த.வெ.க அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தமிழ்நாட்டில் கடந்த மூன்று மாதங்களில் பாலியல் வன்கொடுமைகள், கொலைச் சம்பவங்கள், போதை பொருள் கடத்தல் உள்பட எண்ணற்ற குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டு வரும் த.வெ.க. வினரையும் இந்த குற்றச் சம்பவங்களை தடுக்க தவறிய த.வெ.க. அரசையும் இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் மின்வெட்டு இல்லாமல் சீரான மின் விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் த.வெ.க. அரசு பொறுப்பேற்ற நாள் முதல் தமிழ்நாட்டில் தொடர் மின்வெட்டு, மின் கணக்கீடு குளறுபடியால் கடுமையான மின் கட்டணம் உயர்வு ஏற்பட்டு பொதுமக்கள், வணிக பெருமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்விநியோகத்திலும், மின் கட்டண உயர்விலும், மின் கணக்கீடு குளறு படிகளை உருவாக்கி வரும் த.வெ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிட மாடல் நாயகர், கழகத் தலைவர் தளபதி அவர்கள் கரூர் மாவட்ட மக்கள் நலனுக்காக வழங்கிய முத்தான திட்டங்களான கரூர் மாநகராட்சியில் ரூ.485.38 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டம், கரூர் மாநகராட்சி பகுதிக்கு ரூ.245.07 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்டம், ரூ.38.50 கோடி மதிப்பீட்டில் IT பார்க் திட்டம், ரூ.10கோடி மதிப்பீட்டில் கரூர் ஊராட்சி ஒன்றியம்,16 கால் மண்டபம் நெரூர் சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பணிகளின் ஒப்பந்த புள்ளியை ரத்து செய்த த.வெ.க. அரசை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.





கரூர் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் கரூர் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் நடைபெற்றது. மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.